**ஜூலை - 25**

**"நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே. அவரே இரட்சிக்கவும், அழிக்கவும் வல்லவர். மற்றவனைக் குற்றப்படுத்துவதற்கு நீ யார்? - யாக் 4 : 12.**

மேலே சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கு இணக்கமாகவே உலகமோ, சகோதரரோ, தன்னை நியாயந்தீர்க்கத் தகுதியில்லாதவர்களாயிருக்கிறார்கள் என்று அப்போஸ்தலன் ஒரு இடத்தில் சொல்லுகிறார். இருதயத்தை வாசிக்கக்கூடியவரும், எல்லா நிலைமைகளையும், சோதனைகளையும் எதிர்த்து நாம் போராட வேண்டிய பலவீனங்களையும் அறிகிறவருமாகிய கர்த்தர் ஒருவரே தகுந்தவிதமாக நியாயந்தீர்க்கக் கூடும் என்றும் கூறுகிறார். அவர் இதையும் சொல்லுகிறார். "நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை." (1கொரி 4:3) கர்த்தரின் பிள்ளைகளாக மனசாட்சியுடன் நடந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிற மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்கக் கூடாது. ஒத்தச் சூழ்நிலையில் நம்மையே குற்றவாளிகள் என்று தீர்க்கவும் கூடாது என்பது ஒரு தலைசிறந்த திட்டமாகும். பரத்துக்கடுத்த குணசீலங்களை வளர்க்க நம்மால் இயன்ற மிகச் சிறந்ததைச் செய்யவும், எல்லா விளைவுகளாயும் கர்த்தரிடத்தில் விட்டுவிட்டு நமது போதகருக்கு ஊழியம் செய்யவும், நாம் ஒவ்வொரு நாளும் தொடர மாத்திரம் வேண்டும். **- Z '99, 139 (R 2479)**

தன்னுடைய எல்லா சுயேச்சையாக நீதி சம்பந்தமானவற்றைச் செய்யக் கூடியவர்களை ஆளுகை செய்கிற பிரமாணங்கள் தேவனுடைய இருதயத்திலிருந்தும் மனதிலிருந்தும் உண்டாகின்றன. அவர்களுடைய இருதயங்களிலும், மனதிலும் அவை எழுதப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்தில் தேவனே பிரமாணிகராக இருக்கிறார். அதற்கேற்ப, யார் தன்னுடைய பிரமாணத்துடன் இணக்கமாக நிலைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு ஜீவனையும், யார் தன்னுடைய பிரமாணத்தை மீறுகிறார்களோ, அவர்களுக்கு மரணத்தையும் கொடுத்து, உரிமையினால் பிரமாணத்தை அமுலுக்குக் கொண்டு வருகிறவரும் அவரே. இந்த நிலை, அவருடைய நியமனமில்லாமல் அவருடைய நியாயசனத்தை உபயோகிப்பதிலிருந்து யாரையும் தடுக்கிறது. **- P '35, 102.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**எபே 4:31; லூக் 6:37; ரோம 2:1; 9:20; 14:4,13; 1கொரி 4:5; யாத் 20:16; மத் 10:28; ஏசா 8:12,13; லூக் 12:4,5; 1பேது 3:14,15; எபி 7:25.**

**கோபுர வாசிப்பு : Z '11, 120 (R 4802)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் தேவனுடைய நியாயாதிபத்தியத்துக்கு இசைவாக உணர்ந்து நடந்தேனா? அதில் என்ன அனுபவங்கள் இடையூறாக அல்லது உதவியாக இருந்தன? அதன் பலன்கள் என்ன?**